# ஆற்றுப்படையில் தொழில் நுட்பங்கள் (உழவும் நெசவும்)

*முனைவர் இரா. ஜீவாராணி*
உதவிப் பேராசிரியர், இளநிலைத் தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, (தன்னாட்சி), சிவகாசி
https://doi.org/10.5281/zenodo.15323777

## முன்னுரை

*தமிழின் முதல் இலக்கியமாகவும் முதன்மையான இலக்கியமாகவும் திகழ்வது சங்க இலக்கியம். அதில் பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்களாகக் கருதப்படுவது ஐந்து. அவை திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) என்பனவாகும். இவ்வாற்றுப் படை நூல்களின் வாயிலாக, சங்ககால மக்களின் முதன்மைத் தொழிலாகக் கருதப்படுகின்ற உழவுத் தொழில் மற்றும் நெசவுத் தொழில் சார்ந்த தொழில்களையும் அத்தொழிலில் புதுமைகளைப் புகுத்திப் பல நுட்பங்களையும் கண்டுபிடித்தனர். அதனைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.*

## உழவுத்தொழிலில் புதிய நுட்பங்கள்

*தொழில், வணிகம் காரணமாகப் பொருள் வளத்தினைப் பெருக்க மக்கள் குழுக்களாக வாழ்ந்தனர். அவ்வாறு தொழில் வளத்தினைப் பெருக்குவதற்காக அவர்கள் பல்வேறு தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தினர்.*

*ஒரு நாட்டில் உழவுத் தொழிலும் வணிகமும் செழித்திருந்தால் அந்நாடு மேம்பாடு அடையும். என்பதனை, "ஒரு நாட்டின் தொழில்களில் உழவும் வணிகமுமே தலை சிறந்தன என்பது அறிஞர் கொள்கை"[1] என்ற சு.வித்யானந்தனின் கருத்து சிந்திக்கத்தக்கது. பெரும்பாணாற்றுப்படையில் கொழுமுகம் நிலத்தில் அழுந்துமாறு நன்கு உழுதனர் என்பதனை,*

***"உடுப்புமுக முழுக் கொழு மூழ்க ஊன்றித்***
***தொடுப்ப எறிந்து உழுத துளர்படு துடவை"***

*(பெரும்பாண்.199-200)*

*என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.*

*நிலத்தினை நன்றாக உரமிட்டு உழுத பின்பு தான் நாற்று நடுவர். இதனை,*

***"முடி நாறழுத்திய நெடுநீர்ச் செறுவில்"***

*(பெரும்.212)*

*என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.*

*குறிஞ்சி நிலத்தில் மலையைச் சுற்றியுள்ள அடிவாரப்பகுதியில் தினை, வரகு, அவரை, எள், வெண்சிறுகடுகு, மூங்கில் நெல், இஞ்சிக் கிழங்கு, கவலைக்கிழங்கு, மா, பலா, மலை வாழை ஆகியவை விளைவிக்கப்பட்டன என்பதனை மலைபடுகடாம் எடுத்துரைக்கிறது. இதனை,*

***"குளிர்புரை கொடுங்காய் கொண்டன அவரை***
***இரும்புகவர் வுற்றன பெரும்புனவரகே***
***வாலிதின் விளைந்தன ஐவனம் வெண்ணெல்***
***ஆலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே***
***அவற்பதங் கொண்டன அம்பொதி தோரை***
***தொய்யாது வித்திய துளர்படு துடவை***
***காயங் கொண்டன இஞ்சிமா விருந்து***
***துறுகல் சுற்றிய சோலை வாழை***
***முற்றலமரும் உந்தூழ் அகலறை***
***காலின் உதிர்ந்தன கருங்கனி நாவல்***
***ஆரலை உக்கன நெடுந்தாள் ஆசினி"***

*(மலைபடு. 110 - 139)*

*என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.*

*சங்ககால மக்கள் பயிரிடுகின்ற முறையில் மிகவும் நுணுக்க முறையினைப் பின்பற்றினர். ஏனெனில். தரிசு நிலத்தில் உணவுப் பொருட்களை மாற்றிப் பயிரிட்டால் அந்நிலமானது இழந்த மண் வளத்தினை மீண்டும் பெறும் என்ற உழவு நுணுக்கத்தினை அறிந்து வைத்திருந்தனர்.*

**"பால்வார்பு கெழீஇ பல்கவர் வளி போழ்பு
வாலிதின் விளைந்தன ஐவன வெண்ணெல்"**
**(மலைபடு. 114-115)**

என்ற மலைபடுகடாம் பாடல் அடிகளின் வாயிலாக, தினைப்பயிரினை அறுவடை செய்த பின்பு தினைத் தாளோடு நிலத்தினை சிலநாள் அப்படியே விட்டுவிட்டுப் பருத்தியைப் பயிரிட்டதனை அறிந்து கொள்ள முடிகிறது.

நிலத்தில் விளைந்த தினைப் பயிரினை விலங்குகளிடமிருந்து பாதுகாக்க செடி கொடிகளால் வேலி அமைததிருந்தனர். அவ்வேலியினை வாழ்முள்வேலி என்றழைத்தனர். இதனை,

**"வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பை"**
**(பெரும்.126)**

என்ற அடியின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. முள்ளினை வைத்தும் வேலி அமைத்திருந்தன. அதனை இடுமுள்வேலி என்று அழைத்தனர். இதனை,

**"இடுமுள்வேலி எருப்படு வரைப்பு"**
**(பெரும்.154)**

என்ற அடியின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

நெல்லில் இருக்கின்ற வைக்கோலையும் கூளத்தையும் நீக்கி உலர வைத்து, அதன் பின் மேல்காற்றிலே தூற்றி நெல்லைக் குவித்து வைப்பர் இந்நெற்குவியலைப் பார்ப்பதற்கு மேருமலையைக் காட்டிலும் சிறப்புற்றுக் காணப்படும். இதனை,

**"தூம்புடைத் திரள் தாள் துமித்த வினைஞர்
பாம்பு உறை மருதின் ஓங்கு சினை நீழல் .
குடகாற்று எறிந்த குப்பை வடபால்
செம்பொன் மலையின் சிறப்பத் தோன்றுந்
தண்பணை தழீஇய தளரா இருக்கை"**
**(பெரும்பாண். 231-242)**

என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

மேலும் தூய்மை செய்யப்பட்ட நெல்லினை நெற்கூடுகளில் பாதுகாத்து வைப்பர். அந்நெற் கூடுகள் ஏணிக்கும் எட்டாத அளவிற்கு நெடிய வடிவுடன் மேற்பகுதி திறந்து நெல்லைக் கொட்டுவதற்கு ஏற்றாற் போல் காணப்படும். அக்கூடுகள் புரி சுற்றியும் சுற்றாமலும் மலை போல் அமைக்கப்படும். கூடுகள் உள்ள நெல்லின் அளவைக் குறிக்கப் புள்ளிகள் இடுவர். இதனை,

**"ஏணி எய்தா நீள்நெடு மார்பின்
முகடுதுமித்து அடுக்கிய பழம்பல் உணவின்
குமரி மூத்த கூடோங்கு நல்லில்"**
**(பெரும்.245-247)**

என்ற அடிகளின் வாயிலாகச் சங்க கால மக்கள் நெற்கூடுகளில் இட்டு நெல்லினைப் பாதுகாத்து வைத்த முறையினயும் கூடுகளில் இருக்கும் நெல்லின் அளவினை அறிந்து கொள்வதற்குப் புள்ளிகளிட்டும் மிக நுணுக்கமான முறையினைப் பயன்படுத்தியதனை அறிந்து கொள்ள முடிகிறது.

மேற்கண்டவற்றின் வாயிலாக, சங்ககால மக்கள் இயற்கையாகவே கிடைக்கக் கூடிய வளங்களை வைத்தே இன்பமாக வாழ்ந்தனர். இதன் காரணமாக அவர்கள் பல்வேறு விதமான புதிய கண்டுபிடிப்புகளையும் அறிந்து, அக்கண்டுபிடிப்புகளின் வாயிலாகத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தித் தரிசு நிலத்தில் உணவுப் பொருட்களை மாற்றிப் பயிரிட்டு மண் வளத்தினை மீண்டும் பெறல், நெற்கூடுகளில் நெல்லினைப் பாதுகாத்தல், நெற்கூடுகளில் இருக்கின்ற நெல்லின் அளவினை அறிய புள்ளிகளிடல் போன்ற தொழில் நுணுக்கத்தினை அறிந்து உழவுத்தொழில் மேன்மையுற வழகாடடினர். இதன் வாயிலாக, சங்ககால மக்கள் நாகரிகத்தில் மேம்பட்டிருந்தாலும் கூட பிற்காலத் தலைமுறையினர் தன்னுடைய திறமைகளை உணரும்வகையில்புதியகண்டுபிடிப்புகளைக் கண்டறிந்து புதுமைகளைப் புகுத்தியதனர் என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது.

## நெசவுத் தொழிலில் புதிய நுட்பங்கள்

தொடக்க காலத்தில் மனிதன் இலைகளையும், மரப் பட்டைகளையும் ஆடையாக அணிந்திருந்தான். நாளடைவில் அந்நிலை மாறி மக்கள் தங்கள் நுண்ணறிவின்

திறத்தால் விலங்குகளின் தோல்களையும் பருத்தியின் பஞ்சினை நூலாக நூற்று ஆடையாக நெய்து அணியத் தொடங்கினர். "இது வீட்டுத் தொழில்களில் முக்கியமானது. பண்டைத் தொழில்களுள் ஒன்று. விவசாயத்துக்கு அடுத்தது. மக்கள் நாகரீகம் அடையத் தொடங்கியதும் கையாண்ட முதல் கைத்தொழில்"[2] என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகின்றது.

பாலாவியைப் போன்ற ஆடையினை நெய்திருந்தனர் என்பதனை,

**"ஆவியன்ன அவிர்நூற் கலிங்கம்"** (பெரும்.469)

என்ற அடியின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

திருமுருகாற்றுப்படையின் வாயிலாக, சிவப்பு நிற ஆடைகளையம், துகில், கலிங்கம் போன்றவற்றையம் நெய்தனர். கூடாரத்தணி என்ற ஒரு வகை முரட்டுத் துணியையம் நெய்திருந்தனர் என்பதனை,

**"சிவந்த ஆடையன்"** (திருமுருகு.206)

**"மருங்கில் கட்டிய நிலன் நேர்பு துகிலினன்"**

(திருமுருகு.214)

என்ற பாடல் அடிகள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

நேர்த்தியாக நெயயப்பட்ட பட்டாடைகளில் கரை வைத்துக் கலைநயத்துடன் அழகு படுத்தியதனை,

**"கொட்டைக்கரைய பட்டுடை"** (பெரும்.155)

என்ற அடி உணர்த்துகின்றது.

ஆடை உற்பத்தியில் பருத்தி மட்டும் இல்லாமல் பட்டு இழையையும் பயன்படுத்திப் பட்டாடை தயாரிக்கும் தொழில் நுட்பத்தினை அறிந்து வைத்திருந்தனர். இதனை,

**"பாசி வேரின் மாசொடு குறைந்த**
**துன்னற் சிதாஅர் நீக்கித் தூய"**

(பொருநர்.153-154)

என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

நுண்மையான நூலினைக் கொண்டு நெய்யப்பட்ட ஆடையின் இழைகளின் வரிசையைக் கூடக் காண முடியாத அளவிற்குத் தொழில் நுட்பத்தினை அறிந்து வைத்திருந்தனர் என்பதனை,

**"நோக்க நுழை கல்லா நுண்மைய பூக்கனிந்து**
**அரவுரியன்ன அறுவை"** (பொருந.82)

**"இழை மருங்கு அறியா நுழை நூற் கலிங்கம்**
**எள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ"**

(மலைபடு.561-562)

என்ற பாடல் அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

மக்கள் ஓர் ஆடையை மட்டுமே அணிந்து மிகவும் எளிமையாக வாழ்ந்தனர் என்பதனை,

**"ஒன்றமர் உடுக்கைக் கூழார் இடையன்"**

(பெரும்.175)

என்ற அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

மேலும் நெசவுத் தொழில் நுட்பங்களில் கூட நேர்த்தியான முறையில் மக்களின் நம்பிக்கைகளை இவர்களின் தொழில் நுட்பத்தின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. ஏனென்றால் இன்றைய கால கட்டங்களில் பிறரை ஏமாற்றக் கூடிய அளவிற்குத் தரமற்ற பொருட்களைக் கொடுத்து வணிகம் செய்கின்றனர். ஆனால் சங்க காலத்தில் பாமரன் முதல் மன்னன் வரை அணியக் கூடிய ஆடைகளை எந்த விதமான செயற்கையும் இன்றி இயற்கையான முறையில் பல்வேறு புதுமைகளைப் புகுத்தி, மக்கள் மனதை நிறைவு செய்யும் வகையினை அறிந்து கொள்ள முடிகிறது.

## தொகுப்புரை

கொழுமுகம் நிலத்தில் அழுந்துமாறு நன்கு உழுதிருந்தனர்

நிலத்தினை நன்றாக உரமிட்டு உழுத பின்பு தான் நாற்று நட்டனர்.

தரிசு நிலத்தில் உணவுப் பொருட்களை மாற்றிப் பயிரிட்டால் அந்நிலமானது இழந்த மண் வளத்தினை மீண்டும் பெறும் என்ற உழவு நுணுக்கத்தினை அறிந்து வைத்திருந்தனர்.

தினைப்பயிரினை அறுவடை செய்த பின்பு தினைத் தாளோடு நிலத்தினை சிலநாள் அப்படியே விட்டுவிட்டுப் பருத்தியைப் பயிரிட்டனர்.

*நிலத்தில் விளைந்த தினைப் பயிரினை விலங்குகளிடமிருந்து பாதுகாக்க வாழ்முள்வேலி, இடுமுள்வேலி அமைத்துப் பயிர்களைப் பாதுகாத்தனர்.*

*சங்ககால மக்கள் பல்வேறு விதமான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, தரிசு நிலத்தில் உணவுப் பொருட்களை மாற்றிப் பயிரிட்டு மண் வளத்தினை மீண்டும் பெறல், நெற்கூடுகளில் நெல்லினைப் பாதுகாத்தல், நெற்கூடுகளில் இருக்கின்ற நெல்லின் அளவினை அறிய புள்ளிகளிடல் போன்ற பல்வேறு தொழில் நுணுக்கத்தினை அறிந்து வைத்திருந்ததனை அறிந்து கொள்ள முடிகிறது.*

*பாலாவியைப் போன்ற ஆடையினை நெய்திருந்தனர் பல வண்ணங்களையும் பயன்படுத்தி ஆடைகளை நெய்திருந்தனர்.*

*கூடாரத்தணி என்ற ஒரு வகை முரட்டுத் துணியையம் நெய்திருந்தனர்*

*நேர்த்தியாக நெய்யப்பட்ட பட்டாடைகளில் கரை வைத்துக் கலைநயத்துடன் நெய்திருநதனர்.*

*நுண்மையான நூலினைக் கொண்டு நெய்யப்பட்ட ஆடையின் இழைகளின் வரிசையைக் கூடக் காண முடியாத அளவிற்குத் தொழில் நுட்பத்தினை அறிந்து வைத்திருந்தனர்*

*சங்க கால மக்கள் ஓர் ஆடையை மட்டுமே அணிந்து மிகவும் எளிமையாக வாழ்ந்தாலும் கூட புதிய கண்டுபிடிப்புகளிலேயே கவனம் செலுத்தினர் என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது.*

**அடிக்குறிப்புகள்**

1. *சு.வித்தியானநதன், தமிழர் சால்பு, ப.எண்.231*
2. *கலைக்களஞ்சியம் - தொகுதி-4, ப.215*